**மாகாண அரசின் புதிய கோவிட்-19 நடவடிக்கைகளுடன் இசைந்து போகும் வகையில் நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் சேவைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் புதுப்பிக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 20, 2021) – விரைவாகப் பரவி வருகின்ற மற்றும் உயரிய அளவில் பற்றிக்கொள்கிற கோவிட்-19 ஓமிக்ரான் தொற்றுவகையை எதிர்கொள்வதற்காக, ஆட்கள் கூடுவதற்கான கொள்திறன் மற்றும் சமூக கூட்டம் கூடுதலுக்கான எண்ணிக்கை வரம்புகள் உள்ளிட்ட கூடுதல் பொது சுகாதாரம் மற்றும் பணியிடப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒன்ட்டாரியோ அரசு அறிமுகம் செய்துள்ளது.

**பொது சுகாதார நடவடிக்கைகள்**

<u>தனியார் கூடும் சமூக கூட்டங்கள்</u>

டிசம்பர் 19, 2021 தேதிப்படி தனியார் கூடும் சமூக கூட்டங்களில் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை:

- கட்டிடங்களுக்கு உள்ளே 10 பேர்
- திறந்த வெளியில் 25 பேர்

<u>ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்ச்சிகள்</u>

டிசம்பர் 19, 2021 தேதிப்படி, பொது மக்கள் கூடும் சமூக கூட்டங்களில் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை:

- கட்டிடங்களுக்கு உள்ளே 25 பேர்- உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடித்தபடி மற்றும் முக கவசம் அணிந்தபடி.
- திறந்த வெளியில் ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்ச்சிகளில் எண்ணிக்கை வரம்புகள் இல்லாமல் கூட அனுமதிக்கப்படுகின்றனர். உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது சாத்தியம் இல்லாதபோது முக கவசம் அணிந்தபடி இருப்பது அவசியமாகும்.

<u>எண்ணிக்கை கொள்ளவு வரம்புகள்</u>

டிசம்பர் 19, 2021 தேதிப்படி, பின் வரும் பொது அமைப்புக்களில் 50 சதவீத எண்ணிக்கை கொள்ளளவு இருந்துவரும்:

- சிற்றுண்டியகங்கள் மற்றும் மது அருந்தும் பார்கள்
- சுய பராமரிப்பு சேவைகள்
- சுய உடற்தகுதி பயிற்சி மையங்கள்
- சில்லறை விற்பனைக் கடைகள் (மளிகை மற்றும் மருந்துக் கடைகள் உள்பட)
- ஷாப்பிங் மால்கள்
- பார்வையாளர்கள் இருக்காத விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் கட்டிட பகுதிகள் (உதா., ஜிம்கள்)
- கட்டிடங்களுக்கு உள்ளேயான பொழுதுபோக்கு வசதிகள்
- திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகளில் உள்ள, உள்ளக கிளப் ஹவுஸ்கள்
- சுற்றுலா மற்றும் வழிகாட்டி சேவைகள்
- புகைப்படம் எடுக்கும் ஸ்டூடியோக்கள் மற்றும் சேவைகள்

ஒரு வணிக இடத்தின் ஒரு பகுதி அல்லது திருமணம், இறுதி ஊர்வலம் அல்லது மதச் சடங்கு, இசைக்கச்சேரி அல்லது சடங்குகளுக்காக உபயோகிக்கப்படும் இடங்களுக்கு இந்த வரம்புகள் பொருந்தமாட்டாது. வியாபார ஸ்தலங்கள் அல்லது கட்டிடங்களில் அந்த இடத்திற்கென அனுமதிக்கப்பட்ட ஆட்களின் கொள்திறன் எண்ணிக்கை வரம்புகள் என்னவெனத் தெரிவிக்கின்ற அறிவிப்புப் பலகைகளை வைக்க வேண்டும்.

கூடுதல் நடவடிக்கைகள்

கோவிட்-19 மற்றும் ஓமிக்ரான் வகை ஆகியவற்றின் பரவலைத் தடுக்க, கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பிரயோகம் செய்யப்படுகின்றன:

- சிற்றுண்டியகங்கள், மது அருந்தும் பார்கள் மற்றும் திறந்தவெளி உணவு மற்றும் பானங்களுக்கான நிறுவன அமைப்புக்கள், கூட்டம் கூடுதல் அல்லது நிகழ்ச்சிகள் நடக்குமிடங்கள் மற்றும் ஸ்ட்ரிப் கிளப்புகளில் வாடிக்கையாளர்கள் உட்காந்து மட்டுமே சாப்பிட/அருந்த வேண்டும் மற்றும் ஒரு மேஜையில் 10 க்கு மிகாத நபர்களே உட்கார அனுமதிக்கப்படுவர்.
- சிற்றுண்டியகங்கள், மது அருந்தும் பார்கல் மற்றுள் திறந்தவெளி உணவு மற்றும் பானங்களுக்கான நிறுவன அமைப்புக்கள், கூட்டம் கூடுதல் அல்லது நிகழ்ச்சிகள் நடக்குமிடங்கள் மற்றும் ஸ்ட்ரிப் கிளப்புகள் ஆகியவை இரவு 11 மணிக்கு மூடிவிட வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கான சேவையும் இரவு 11 மணிவரையே அனுமதிக்கப்படுகிறது.
- பணியாளர்கள் மற்றும் நிகழ்த்துபவர்கள் அல்லாதோர் நடனமாட அனுமதியில்லை.
- இசை நிகழ்ச்சி நடக்குமிடங்கள், நாடகம் மற்றும் திரையரங்குகள், கேஸினோக்கள், பிங்கோ அரங்குகள் மற்றும் விளையாட்டு நிறுவன அமைப்புக்கள் மற்றும் குதிரைப்பந்தய ஓட்டம் நடக்குமிடங்கள், கார் பந்தயம் நடக்குமிடங்கள் மற்றும் இதுபோன்ற இடங்களில் உணவு மற்றும் பானம் வழங்கும் சேவைகள் தடை செய்யப்படுகின்றன.
- மதுபானம் விற்பனை செய்வது இரவு 10 மணிக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் வியாபார அமைப்புக்களில் இரவு 11 மணிக்கு மேல் மது அருந்துவது அனுமதிக்கப்பட மாட்டாது.

மாகாணத்தின் முழுச்செய்தி வெளியீட்டினைப் படிக்க, இங்கு வரவும்.

**நகரின் சேவைகள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் வசதியமைப்புக் கட்டிடங்கள்**

நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள்

நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள் மக்கள் நேரில் வந்து சேவைகளைப் பெறுவது முன்பதிவின் பேரில் மட்டுமே இருக்கும். போகிற போக்கில் வருவது அனுமதிக்கப்படுவதில்லை.

முன்பதிவு செய்து கொள்ள வருகை தாவும்: www.brampton.ca/skiptheline.

வரவிருக்கும் விடுமுறைக்காலத்தின்போது, நகர் மன்றம் உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் நகர அலுவலகங்கள் 2021டிசம்பர் 24 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 2022, ஜனவரி 4 செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி வரை மூடப்படும். கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் ப்ராம்ப்ட்டன் நகர விடுமுறைப்பருவம் பற்றி மேலும் அறிய இங்கு படிக்கவும்.

ரோஸ் கட்டிடம் மற்றும் நிகழ்த்து கலை நடத்தப்படும் கட்டிடங்கள்:

- அனைத்து கட்டிடங்களுக்கும் உள்ளாக முகக் கவசம் அணிவது கட்டாயமாக அமலில் இருக்கும்

- கட்டிடங்களுக்கு உள்ளாக நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஆட்கள் கொள்திறன்எண்ணிக்கை 50% அளவுக்கே தொடர்ந்து இருந்துவரும்
- அனைத்து நேயர்களுக்கும் முழு டிக்கட் பணம் (கிரெடிட் கார்டு/காசோலை, கணக்கில் வரவு, நன்கொடை) தொடர்ந்து வாபஸ் தரப்படும்
- ரோஸ் கட்டிடத்தில் உள்ள மது அருந்தும் பார்கள் மூடப்பட்டிருக்கும்; உணவோ அல்லது பானமோ பரிமாறுதல் மற்றும் விற்பனை செய்தல் இருக்காது
- வாடகைக்கு விடுவது என்பது தனியொருவர் என்ற அடிப்படையில் ஏற்கெனவே இருக்கும் வாடகைக்கு விடும் செய்முறை மற்றும் கால நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப கருத்தில் கொள்ளப்படும்
- தடுப்பூசி செலுத்திக்கொண்ட நிரூபணம், அல்லது மருத்துவ விலக்கு ஆகியவை அனைத்து நேயர்கள் மற்றும் வாடகைக்கு எடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு அவசியமாகும்
- தடுப்பூசி செலுத்திக்கொண்ட நிரூபணம், அல்லது கோவிட்-19 இல்லை என்பதற்கான நிரூபணம் அனைத்து ப்ராம்ப்ட்டன் நகர அலுவலர்கள், தன்னார்வலர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கைவினைப் பணியாளர்கள், கியூரேட்டர்கள் மற்றும் கூட இருந்து பணியாற்றுபவர்களுக்கு அவசியமாகும்.

<u>பொழுதுபோக்கு</u>

- பதிவு செய்யப்பட்ட மற்றும் போகிறபோக்கில் வருவதற்கான நிகழ்ச்சி நிரல்கள் – நீச்சல், ஸ்கேட் செய்தல் மற்றும் உடற்பொருத்த பயிற்சி ஆகிய அனைத்துக்கும், போகிறபோக்கில் வருவதற்கு, கோவிட்-19 க்கு முந்தைய எண்ணிக்கை கொள்திறனில் 50 % க்கு சீரமைக்கப்படும். புதிய ஒழுங்குமுறைகள் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைப் பாதிக்காது. இந்த நிகழ்ச்சிகளில் எண்ணிக்கை கொள்திறன் என்பது பயிற்றுவிப்பாளர் மற்றும் பங்கேற்பாளருக்கு இடையில் சீர் செய்துகொள்ளப்படும்; இது அதிகபட்ச எண்ணிக்கை கொள்திறனில் 50% க்கும் குறைவாகவே இருக்கும்.
- உடற்பொருத்த மையங்கள் – உடற்பொருத்த மையங்களுக்கு தொடர்ந்து செல்லலாம்-முதலில் வருபவர் முதலில் என்ற அடிப்படையில், 50% கொள்திறன் எண்ணிக்கை வரம்பு விதிக்கப்படும். கொள்திறன் எண்ணிக்கை வரம்பு மீறிவிடாமல் இருக்க ஆட்கள் உள்ளே வந்து செல்வதை ஒரு குறிப்பிட்ட நுழைவு நிலையில் இருந்தபடி அலுவலர்கள் கண்காணிப்பார்கள்.
- அறை வாடகைக்கு விடுதல் – இனி வரவிருக்கும் அறைகளை வாடகைக்கு விடும் ஒப்பந்ததாரர்களுக்கு புதிய ஆள் கொள்திறன் தேவைப்பாடுகளை பற்றிய தகவல்கள் கொடுக்க அவர்கள் தொடர்பு கொள்ளப்படுகிறார்கள். இயன்ற இடங்களில், ஒப்பந்தம் வைத்திருப்பவர்களுக்கு அதிக இடத்தை கூடுதல் கட்டணம் ஏதுமில்லாமல் வழங்கி தங்கவைக்கப்படுகிறார்கள் அல்லது வரவு வைக்கப்படுகிறது/தள்ளுபடி வழங்கப்படுகிறது.
- பணம் திருப்பிக் கொடுத்தல்/வரவு வைத்தல் – ஒரு நிகழ்ச்சியிலிருந்து விலகிவிட்ட, வாடகையை ரத்து செய்துவிட்டவர் அல்லது அங்கத்தினர் பதவியை ரத்து செய்துவிட்ட ஒருவர் ஆகிய எவர் ஒருவருக்கும் முழுப் பணமும் வரவில் வைக்கப்படுகிறது. பணம் திரும்பிக் கேட்க விரும்பும் எவர்

ஒருவரும் ஒரு வேண்டுகோளை recreationadmin@brampton.ca மூலமாக அல்லது கட்டிட அலுவலர் மூலமாக சமர்ப்பிக்கலாம்.

- சலுகைகள் – அடுத்த அறிவிப்பு வரும் வரை சலுகைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும். மதுபானம் அருந்தும் பார்கள் தொடர்ந்து இயங்கும், இருப்பினும் மதுபான விற்பனை இரவு 10 மணி வரை மட்டுமே இருக்கும்.

பாதிப்பு ஏற்பட்ட குடியிருப்புவாசிகள், அலுவலர்களால் நேரடியாக தொடர்பு கொள்ளப்படுவார்கள் மற்றும் ஆன்லைன் வழியாக விவரமான புது தகவல்கள் கொடுக்கப்படும்..

*பொழுதுபோக்கு கட்டிடங்களில் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான நிரூபணம்*

சமீபத்திய மாகாண அறிவிப்புக்கு ஏற்ப, 2022 ஜனவரி 4 ஆம் தேதி முதல், ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு கட்டிடங்களில் நுழைய, வாடிக்கையாளர்கள் QR குறியீட்டுடன் கூடிய தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான சான்றிதழ், மற்றும் மேம்படுத்தப்பட்ட Verify Ontario செயலியை உபயோகிக்க கேட்டுக்கொள்ளப்படுவார்கள். QR குறியீடானது டிஜிட்டல் வடிவில் அல்லது காகிதத்தில் அச்சடித்த பிரதி உபயோகிக்கப்படலாம்; தனி நபர்கள் தங்களின் மேம்படுத்தப்பட்ட QRகுறியீட்டுடன் கூடிய தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான சான்றிதழை https://covid-19.ontario.ca/book-vaccine/ க்கு வருகை புரிந்து பதிவிறக்கிக் கொள்ளலாம்.

கூடுதலாக, ஜனவரி 10, 2022 ஆம் தேதி முதற்கொண்டு, தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறுவதற்காக மருத்துவரின் குறிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மருத்துவ விலக்குகள் QR குறியீட்டுடனான சான்றிதழைக் கொண்டே சரிபார்க்கப்படும்.

*தொடர்பின் தடம் தேடுதல் மற்றும் பொழுதுபோக்கு மையங்களில் QR குறியீட்டினைக் கண்டறிதல்*

ஜனவரி 3, 2022 ஆம் தேதி துவங்கி, அனைத்து வாடிக்கையாளர்களும் ஒரு ஆன்லைன் ஸ்க்ரீனிங் மற்றும் தொடர்பின் தடம் தேடுதல் ஆகியவற்றை சமுதாய மையத்திற்கு வந்து சேரும் முன்பாகவே பூர்த்தி செய்ய தேவைப்படுகிறார்கள். இந்த ஆன்லைன் ஸ்க்ரீனிங் கருவியை

நேயர்கள் www.brampton.ca/recscreening க்கு வருகை தருவதன் மூலம் அல்லது கட்டிட நுழைவாயில்களில் அமைந்துள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் அணுகலாம். ஸ்க்ரீனிங்-ற்கு முந்தைய கேள்விகளை ஸ்மார்ட்ஃபோன்/கணினி உபயோகித்து முன்னதாகவே ஆன்லைனில் பூர்த்தி செய்வதன் மூலம் நேரத்தை மிச்சம் பிடிக்கலாம். மாறாக, நுழையும் இடத்தில் இருக்கும் படிவத்தினை பூர்த்தி செய்யலாம். குறிப்பிடப்பட்ட ஸ்க்ரீனிங் பகுதி/நுழைவாயிலுக்கு வந்து சேர்ந்தவுடன், அனைத்து வருகையாளர்களும் தொலைபேசி சாதனம் அல்லது அச்சிடப்பட்ட சான்றிதழைக் காண்பிக்க வேண்டும். ஆன்சைட் அச்சிட்ட காகிதம் அடிப்படையிலான தொடர்பு தடம் தேடலானது, வருகையாளர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும்; இது ஆன்லைனில் முன்னதாக ஸ்க்ரீனிங் செய்து கொள்ள விரும்பாதவர்களுக்கானது.

*ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மைய விடுமுறைக்கால பணிநேரங்கள்*

விடுமுறைக்கால வேலை நேரங்களை இங்கு பார்வையிடலாம்: www.brampton.ca/holidayhours. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு, இங்கு வருகை தரவும்: www.brampton.ca/recreation.

*திறந்தவெளி வசதிகள்*

சீதோஷ்ணநிலை அனுமதிக்கும்பட்சத்தில், திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்கள் விடுமுறைக்காலம் முழுவதிலும் திறந்திருக்கும். இயங்கும் நேரங்கள் மற்றும் முழு விபரங்களை இங்கு காணலாம்: www.brampton.ca/outdoorskating.

ஸ்கீயிங், ஸ்னோபோர்டிங் மற்றும் டியூபிங் ஆகியவற்றுக்கு நகரில் மிகச்சிறந்த இடம் மவுண்ட் சிங்க்வாகவ்ஸி ஆகும்; இவை சிங்க்வாகவ்ஸி பூங்காவில் அமைந்துள்ளன. சீதோஷ்ண நிலையும் பனிப்பொழிவும் அனுமதிக்கும் பட்சத்தில், மவுண்ட் சிங்க்வாகவ்ஸி டிசம்பர் 27 ஆம் தேதி திறக்கப்படவிருக்கிறது. வேலை செய்யும் நேரங்கள், திறந்துள்ள அல்லது மூடியுள்ள நிலைமை மற்றும் பதிவு செய்வதற்கான விபரங்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களுக்கும் வருகை தரவும்: www.brampton.ca/MountChinguacousy.

இன்னும் அதிக திறந்தவெளி வேடிக்கை விளையாட்டு வாய்ப்புக்களை மற்றும் இப்போதிருக்கும் வசதிகளின் நிலைமை பற்றிய சமீபத்திய தகவல்களை www.brampton.ca/winterwonderland இல் தேடிக்கண்டறியுங்கள்.

**கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல்**

உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கான மிகச்சிறந்த வழி தடுப்பூசி செலுத்திகொள்ளுதலே ஆகும். ஐந்து மற்றும் அதற்கும் அதிகமான வயது கொண்டோருக்கான முன்பதிவுகளை இப்போது ஒன்ட்டாரியோவின் தடுப்பூசி செலுத்துதலுக்கான முன்பதிவு கட்டமைப்பு மூலமாக அல்லது 1.833.943.3900 என்ற எண்ணிற்கு அழைப்பதன் மூலமாக முன்பதிவு செய்துகொள்ளலாம்.

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது கொண்ட தனி நபர்கள் இப்போது தங்களுக்கான கோவிட்-19 பூஸ்ட்டர் செலுத்திக்கொள்வதற்கான முன்பதிவினை செய்து கொள்ளலாம்; இதற்கு, அவரவரின் கடைசி டோஸ் செலுத்திக்கொண்ட தேதியிலிருந்து குறைந்தது மூன்று மாதங்கள் முடிந்திருக்க வேண்டும். முன்பதிவு செய்துகொள்ள வருகை தரவும்: https://covid-19.ontario.ca/covid-19-vaccines-ontario

கோவிட்-19 தடுப்பூசி செலுத்துதல் பற்றிய மிக சமீபத்திய தகவல்களுக்கு மாகாணத்தின் தடுப்பூசி செலுத்தும் முனையத்திற்கு வருகை தரவும்

**முகக் கவசங்கள்**

ப்ராம்ப்ட்டன் கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தினை, ஏப்ரல்1, 2022 வரை நகர நிர்வாகம் நீட்டித்திருக்கிறது என குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது..

கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து பொது கட்டிடங்களின் உட்புறத்தில் மருத்துவம் அல்லாத முக கவசம் அணிவது கட்டாயமாகும். கழுத்தில், தலையில் அணியும் எந்தவித துணிகள் அல்லது கதகதப்பாக்கும் கம்பளிகள் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்ட முக கவசங்கள் ஆகமாட்டா. மேலும் இந்தச் சட்டத்தின்படி, உணவு சாப்பிடும்போது அல்லது பானம் அருந்தும்போது, அதற்கான உரிய இடத்தில் அமர்ந்தபடி இருக்கும்போது மட்டுமே முக கவசம் கழற்றப்பட வேண்டும்.

நகரவாசிகள், உடல்ரீதியாக இடைவெளி விட்டபடி, நல்ல சுகாதார பழக்கங்களைக் கடைப்பிடித்தபடி மற்றும் முக கவசங்களை அணிந்தபடி, தொற்று பரவாமல் தடுக்க, தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செய்து வருவதற்காக, நகர நிர்வாகம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சிதிட்டமிடல் மற்றும் சேவை பற்றிய புதுதகவல்கள் (City of Brampton COVID-19 programming and service updates)
- கோவிட்-19 சமயத்தில் வியாபார ஸ்தலங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)
- QR குறியீடு மற்றும் Verify Ontario செயலி மூலமாக App மேம்படுத்தப்பட்ட கோவிட்-19 தடுப்பூசி செலுத்தியமைக்கான மேம்படுத்தப்பட்ட சான்றிதழ் (Enhanced COVID-19 Vaccine Certificate with QR Code and Verify Ontario App)
- கோவிட்-19 தடுப்பூசிகள் (COVID-19 vaccines)

-

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைத்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca